

திருச்சி தெற்கு மாவட்ட, மாநகர் சார்பில் கழக இளைஞரணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி, திருச்சி தெற்கு மாவட்டத்தில் 47வது நிகழ்ச்சியாக மாவட்ட மற்றும் கிழக்கு மாநகர கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை ஏற்பாட்டில் சமத்துவ பொங்கல் விழா காட்டூர் பகுதியில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாநகரச் செயலாளர் மு.மதிவாணன், மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் சமது ஆகியோர் சிறப்புரையாற்றினர். தொடர்ந்து புதுப்பானையில் பொங்கலிட்டு பொங்கலை அனைவருக்கும் வழங்கி அதனைத் தொடர்ந்து அரங்கேறிய பாரம்பரிய கலைகளான சிலம்பம், ஒயிலாட்டம், பறை இசை, உரியடி நிகழ்வு, மற்றும் மூக்குத்திமுருகன் இன்னிசை நிகழ்ச்சிகளை கண்டு களித்து மகளிருக்கு புது பொங்கல் மற்றும் பொங்கல் பொருட்களை வழங்கி சிறப்பித்தனர். மாவட்ட அமைப்பாளர் ராஜ்குமார், மாநகர அமைப்பாளர் செந்தில்குமார் ஆகியோர் தலைமை வகித்த இந்நிகழ்வில் பகுதி கழகச் செயலாளர் நீலமேகம், கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை நிர்வாகிகள், மணிமாறன், பாரதிதாசன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர், நகர கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### கனிமொழி கருணாநிதி எம்.பி. பிறந்த நாள்!

## மலேசியா தளபதி பேரவை சார்பில் அறுசுவை உணவு - கழகத்தினர் வழங்கினர்!

கோலாலம்பூர், ஜன 8 –

கழக துணை பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மலேசியா தளபதி பேரவை சார்பாக செயலாளர் ஹச்.எம்.ஜெய்னுதீன் ஆலோசனையின்படி கோலாலம்பூர் சென்தூள்திமுர் ஏ. சாதிக் பாட்சா டிவிஒய் தலைமையில் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

மகளிர் அணியை சேர்ந்த கதீஜா பிவி, சபியத்நிஷா, நசீமா பேகம், பார்வதி, விஜயா, பிரியா, தனுஷா, உமேரா, அசினா மற்றும் ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர். அதைத் தொடர்ந்து தைப்பிங்கில் பொருளாளர் ஜே.சிவானந்தம் தலைமையில் இனிப்புகள் வழங்கப்பட்டது. ரமேஷ், ஏழுமலை, சென்னப்பன், கல்பனா, மூர்த்தி, சாகுல் ஹமீது, ராணி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். அதைத் தொடர்ந்து சிரம்பானில் எஸ். வினோத், மேல திருமலை ராஜபுரம் பொதுக்குழு உறுப்பினர் தலைமையில் இனிப்புகள் வழங்கப்பட்டன. வைதேகி, சகுந்தலா, ராகவன், சலீமுத்தீன், சர்தார் ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ஜொகுர் சிம்பா ரங்கம், தினேஷ்குமார் தலைமையில் மதிய உணவு வழங்கப்பட்டது. அய்யனார், சேட்டு, மூர்த்தி, ரம்யா, பர்வீன் ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து கிள்ளாங்கில் பொதுக்குழு உறுப்பினர் க.புருசோத்தமன் தலைமையில் இனிப்புகள் வழங்கப்பட்டன. சந்துரு, ரமேஷ், தனபால், சகுந்தலா, ஊர்வசி ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர். தமிழ்நாட்டில் புதுக்கோட்டையில் நிஜாம்கான் தலைமையில் இனிப்புகள் வழங்கப்பட்டன. பர்சாத்அலி, சர்தார், ராமு, திருவையாறு மடம் தெய்வானை தலைமையில் இனிப்புகள் வழங்கப்பட்டன. கனிமொழி, பிரியா, பவித்ரா, அலமேலு, திருமலை, ராஜபுரம் ரேகா தலைமையில் இனிப்புகள் வழங்கப்பட்டன.



புதுக்கோட்டை மாநகரம் 28 வது வார்டு புதுக்கோட்டை மாநகராட்சி தொடக்கப்பள்ளியில். மாபெரும் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கவிச்சுடர். கவிதைப்பித்தன் கலந்து கொண்டு மருத்துவ முகாமைத் தொடங்கி வைத்தார். தி.மு.க. பொதுக்குழு உறுப்பினரும் மாமன்ற உறுப்பினருமான இராசு சந்தோஷ் அனைவரையும் வரவேற்றார். புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்க தலைவர் வி.ஆர்.எம்.தங்கராஜ் தலைமையில் நடைபெற்றது. ரோட்டரி சங்க நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். நிகழ்வில் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

### புதுக்கோட்டை ஆலங்குடி பேரூர் கழகம் சார்பில்

## துணை முதல்வர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

### அமைச்சர்கள் எஸ்.ரகுபதி – சிவ.வீ.மெய்யநாதன் – எழும்பூர் கோபி சிறப்புரை!

புதுக்கோட்டை, ஜன. 8 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், ஆலங்குடி சட்டமன்ற தொகுதி ஆலங்குடி பேரூர் கழகம் சார்பில் கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி எளியோர் எழுச்சி நாள் மாபெரும் பொதுக் கூட்டம் 04.01.2025 - சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் காந்தி பூங்கா (சந்தைபேட்டை), ஆலங்குடியில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர், சட்டம் மற்றும் சிறைத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் நடைபெற்றது.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ மெய்யநாதன் நல்லத் திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

ஆலங்குடி பேரூர் கழக செயலாளர் ஆ.பழனிக்குமார் அனைவரையும் வரவேற்றார். தலைமைக் கழக பேச்சாளர்கள் எழும்பூர் கோபி, ஆலங்குடி செல்வராஜ், இளம் பேச்சாளர்கள் உமாராணி பிரபு ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

நிகழ்வுகளில் மாவட்ட துணைச் செயலாளர்கள் ஞான.இளங்கோவன். ஸ்ரீதேவி அண்ணாதுரை,

ஒன்றியச் செயலாளர் கே.பி.கே.டி.தங்கமணி, அரு.வடிவேல் , எல்.குமார் (எ) துரைக்கண்ணு, பொதுக்குழு உறுப்பினர் ஆர்.வி.செல்வம், ஆலங்குடி பேரூராட்சி தலைவர் ராசி முருகானந்தம், கீரமங்கலம் பேரூராட்சி தலைவர் கே.சி.சிவக்குமார், மகேஸ்வரி சண்முகநாதன், கருணாகரன், எம்.ஜி(எ) ராமச்சந்திரன் ஆர்ட்டிஸ்ட் எஸ். முருகேசன்,

ஏ.வி.தியாகராஜன், நேஷனல் அப்துல்லா, கே.ஆர்.வெள்ளைச்சாமி, ஏ.செங்கோல், அபுல்கலாம் ஆசாத், எம்.கிருஷ்ணமூர்த்தி, எம்.கோவிந்தராஜன் கோவிந்தராஜன், கே. ஜி. கார்த்திக், சி.தண்டபாணி, எஸ்.விஜயக்குமார், எம். மாரியப்பன், எஸ். பி.முத்துராமன், ஆர்.ராஜா முகம்மது, வழக்கறிஞர் கண்ணதாசன், வீரை. ஆசைத்தம்பி, ஏ.எஸ்.ஆர். முகம்மது இப்ராஹிம் முடிவில் பேரூர் கழக பொருளாளர் மணிராஜ் (எ) ரெங்கசாமி நன்றி கூறினார். கூட்டத்தில் 1000க்கும் மேற்பட்டோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

### திருச்சி தெற்கு மாவட்ட , மாநகர

## கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் சார்பாக சமத்துவப் பொங்கல் விழா!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பங்கேற்பு!

திருச்சி, ஜன. 8 -

கழக இளைஞரணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி, திருச்சி தெற்கு மாவட்டத்தில் 47வது நிகழ்ச்சியாக மாவட்ட மற்றும் கிழக்கு மாநகர கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை ஏற்பாட்டில் சமத்துவ பொங்கல் விழா காட்டூர் பகுதியில் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாநகரச் செயலாளர் மு.மதிவாணன், மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் சமது, சிறப்புரையாற்றினார். தொடர்ந்து புதுப்பானையில் பொங்கலிட்டு பொங்கலை அனைவருக்கும் வழங்கி அதனைத் தொடர்ந்து அரங்கேறிய பாரம்பரிய கலைகளான சிலம்பம் ஒயிலாட்டம், பறை இசை, உரியடி நிகழ்வு, மற்றும் மூக்குத்தி முருகன் இன்னிசை நிகழ்ச்சிகளை கண்டு களித்து மகளிருக்கு புது பொங்கல் பானை மற்றும் பொங்கல் பொருட்களை வழங்கி சிறப்பித்தனர்.

இந்நிகழ்விற்கு மாவட்ட அமைப்பாளர் ராஜ்குமார் மாநகர அமைப்பாளர் செந்தில்குமார் ஆகியோர் தலைமை வகித்த இந்நிகழ்வில் பகுதி கழகச் செயலாளர் நீலமேகம், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை நிர்வாகிகள் மணிமாறன், பாரதிதாசன், மற்றும் மாவட்ட ஒன்றிய பேரூர் நகர கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் .

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசுகையில். உழவர்களின் நலனை பாதுகாக்கும் வகையில் அவர்கள் மீதான கடன்களை தள்ளுபடி செய்தது திமுக அரசு, ஆனால் உழவர்களின் கழுத்தை நெரிக்கும் விதமாக மூன்று வேளாண் சட்டங்களை கொண்டு வந்து ஒன்றிய அரசு எப்படி எல்லாம் நெருக்கடியை தந்தது, அதையும் எதிர்த்து போராடியதால் தற்போது பின்வாங்கி இருக்கிறது, அதற்கான முதல் குரல் தமிழக முதலமைச்சரின் குரலாக இருந்தது என்றார்.

ஒன்றிய அரசாங்கத்தின் UGC, NET தேர்வை ஜனவரி 15 அன்று வைக்கிறார்கள். நம்மை எப்படி எல்லாம் வஞ்சிக்க வேண்டும், நம்முடைய பண்பாடு கலாச்சாரத்தில் எப்படியெல்லாம் குறுக்கிட வேண்டும் என்பது பற்றி உட்கார்ந்து யோசிச்சு யோசிச்சு செய்வார்கள் போலிருக்கிறது.

கல்வி என்று வரும் பொழுது மாநில பட்டியலில் கொடுத்து விடுங்கள், எங்கள் பிள்ளைகளை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம், எங்கள் பிள்ளைகளுக்கு என்ன தேவை என்பதையும், நாங்கள் படிப்பு சொல்லி கொடுத்துகிறோம் என எதுக்காக சொல்கிறோம்.

இரண்டு நாட்களுக்கு முன்பு கூட ஒன்றிய அரசாங்கம் இடைநிற்றலே இல்லாத மாநிலம் தமிழ்நாடு என்ற பெயரை பெற்றுள்ளோம் என்று சொன்னால், எங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது தெரியும்,

எங்களிடம் கொடுத்து விடுங்கள் இதை என்று சொன்னால் அந்த தேசிய கட்சியின் மாநில பொறுப்பில் இருக்கக்கூடிய அக்கா தமிழிசை.

அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களே வரலாறை தெரிந்து கொள்ளுங்கள் என்கிறார்.

எப்பொழுது மாநில பட்டியலுக்கு வந்தது தெரியுமா என கேட்கிறார்.

கண் கரண்ட் லிஸ்ட் என்றால் அது ஒத்திசைவு. அந்த ஒத்திசைவு என்று சொன்னால் இரண்டு பேரும் சேர்ந்து கலந்து முடிவெடுக்கலாமா, எடுக்க வேண்டாமா, உங்களுக்கு அது ஒத்திசைவோடு இருக்கிறதா என்பதை கேட்கணும்... இதுவரைக்கும் யாரும் காங்கிரஸ் பேரியக்கத்தில் எந்த ஒரு நெருக்கடியையும் கொடுக்கவில்லை, உங்களுக்கு வேண்டியதை செய்து கொள்ளுங்கள் என்று சொன்னார்களே தவிர, யாரும் உள்ள குறுக்க புகுந்து இதனை ஒத்துக் கொண்டு இதில் கையெழுத்துப் போட்டால்தான் உனக்கு பணம் தருவேன் என இதுவரை யாரும் சொன்னதில்லை, முதல் முறையாக புதிதாக ஒன்றிய அரசு ஆரம்பித்து உள்ளது. மும்மொழி கொள்கையில் கையெழுத்து போட்டால் தான் காசு தருவேன் என சொல்வது,

அதுவும் அந்த அமைச்சர் எப்படி சொல்கிறார்... கையெழுத்து போடுங்கள் அரை மணி நேரத்தில் பணத்தை கொடுத்து விடுகிறோம், இது ஒரு பிரச்சனையே இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு தமிழக அரசை பிளாக் மெயில் செய்கின்றனர்.

தமிழக முதலமைச்சரோ நம்முடைய கொள்கையை விட்டு அந்த பணத்தை வாங்க வேண்டிய அவசியம் இல்லை, அது எவ்வளவு ஆனாலும் நான் பார்த்துக் கொள்கிறேன் தைரிய மாக நீ கல்வி துறையை பார் என்று சொல்லி உள்ளார்.

இன்னும் எவ்வளவு நெருக்கடி வந்தாலும் அதையெல்லாம் உதறி தள்ளிவிட்டு நமக்கான கொள்கை இருக்கின்றது.

நம்முடைய பிள்ளைகளை நாம் பாதுகாப்போம் என்ற விதத்தில், எல்லா விதத்திலும் முன்னேறுகின்ற மாநிலமாக நம்முடைய மாநிலம் இருக்கிறது என்றால் தமிழக முதல்வர், துணை முதல்வரே காரணம் என்று அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி உரையாற்றினார்.



கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் கோ.அய்யப்பன் எம்.எல்.ஏ. தமிழ் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாளை முன்னிட்டும் மற்றும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி, மளிகை பொருட்கள், போர்வை உள்ளிட்ட நிவாரண உதவிகள் வழங்கினார். பின்னர் சாலை சீரமைப்பு பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். அப்போது முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தமிழரசி பிரகாஷ், துணைத் தலைவர் கலியமூர்த்தி, நிலவுல வங்கி தலைவர் கே.வி.எஸ்.ராமலிங்கம், கூட்டுறவு சங்கத் தலைவர் ஆதி பெருமாள், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், வேலன், ஸ்டில்ஸ் வேல்முருகன், முன்னாள் ஊராட்சித் மன்ற தலைவர் சுதாகர், தொ. மு.ச. ஆறுமுகம், பார்த்திபன், விநாயகம், சுதாகர், முருகவேல், நந்தன், ரமேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.


# நாகை மாவட்ட திமுக சார்பில்

கழக இளைஞர் அணி செயலாளர் , தமிழ்நாடு அரசு துணை முதலமைச்சர்

மாண்புமிகு **இளந்தலைவர்** அவர்களின்

## பிறந்தநாள் விழா

## பொதுக்கூட்டம் மற்றும் தெருமுனை பிரச்சாரக்கூட்டம்



| வ.எண் | நாள் | இடம் | பேச்சாளர் பெயர் | இளம் பேச்சாளர் |
|---|---|---|---|---|
| 1 | 09.01.2025 | வேதாரண்யம் கிழக்கு ஒன்றியம் | போடி.காமராஜ் | அருண்குமார் |
| 2 | 09.01.2025 | தலைஞாயிறு ஒன்றியம் | முனைவர். பொன்னேரி சிவா | விஜயலெட்சுமி |
| 3 | 09.01.2025 | நாகை வடக்கு ஒன்றியம் | சைதை சாதிக் | கல்பனா |
| 4 | 09.01.2025 | திட்டச்சேரி பேரூர் | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி | தினேஷ் பாபு |
| 5 | 09.01.2025 | கீழ்வேளூர் தெற்கு ஒன்றியம் | கந்திலி கரிகாலன் | பிரீத்தி |
| 6 | 09.01.2025 | கீழையூர் மேற்கு ஒன்றியம் | பவானி கண்ணன் | அகிலா |
| 7 | 09.01.2025 | வேளாங்கண்ணி பேரூர் | திருவெற்றியூர். கருணாநிதி | கனிமொழி |
| 8 | 10.01.2025 | நாகை நகரம் | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி | தினேஷ் பாபு |
| 9 | 10.01.2025 | வேதாரண்யம் நகரம் | மன்னை சோம.இளங்கோவன் | பிரீத்தி |
| 10 | 10.01.2025 | தலைஞாயிறு பேரூர் | சேலம். சுஜாதா | தீன்ஷா |
| 11 | 10.01.2025 | வேதாரண்யம் மேற்கு ஒன்றியம் | பசும்பொன் ரவிச்சந்திரன் | விக்னேஷ்வரி |
| 12 | 10.01.2025 | திருமருகல் தெற்கு ஒன்றியம் | தூத்துக்குடி.சரத்பாலா | ஷிவானா மரியம் பீவி |
| 13 | 10.01.2025 | நாகூர் நகரம் | சைதை சாதிக் | அகிலா |
| 14 | 10.01.2025 | கீழ்வேளூர் வடக்கு ஒன்றியம் | குடியாத்தம் புவியரசி | அருண்குமார் |
| 15 | 10.01.2025 | கீழையூர் கிழக்கு ஒன்றியம் | பவானி கண்ணன் | சுக நிலவன் |
| 16 | 10.01.2025 | நாகை தெற்கு ஒன்றியம் | கரூர். முரளி | சின்மகி |
| 17 | 10.01.2025 | கீழ்வேளூர் பேரூர் | நாகை. நாகராஜன் | பிரபாகரன் |

@ GS Designs

குறிப்பு : திருமருகல் வடக்கு ஒன்றியத்தில் **மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்** அவர்கள் கலந்து கொள்ள இருப்பதால் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

**என்.கௌதமன்**

மாவட்ட கழக செயலாளர், நாகை மாவட்ட திமுக


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி. இராசரத்தினம்

### சனவரி 8 (1993)



செங்கற்பட்டு மாவட்டக் கழக அவைத் தலைவராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் தொடர்ந்து பூவிருந்தவல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக நான்குமுறையும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றியவர்.

பூவிருந்தவல்லி ஒன்றிய பெருந்தலைவர், பூவிருந்தவல்லி பேரூராட்சித் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்றுப் பணியாற்றியவர்.

விலைவாசி உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றுள்ளார்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்படி ஓராண்டு சிறை தண்டனை அனுபவித்தவர்.

"தோடிக்கு ஒரு இராசரத்தினம், தொகுதிக்கு ஒரு இராசரத்தினம்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**